**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OP | 229 | of | 2019 |

**2025-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 21-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் ம.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1873 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சுபலட்சுமி | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-21.08.2025**

**ம.சா.-1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

லோக் சாய் ரஞ்ஜன் கண்ணாடி அணிந்துள்ளார். அவருடைய கண்ணாடியின் பவர் எவ்வளவு என்று தெரியாது. குழந்தையை காட்டுவதில்லை என்பதால் பவர் பற்றி தெரியவில்லை. குழந்தை பிறந்த போது கிட்னி பிரச்சனை இருந்தது. அதற்காக ராமசந்திரா மருத்துவமனையில் குழந்தை சிகிச்சை பெற்றது தெரியும். குழந்தைக்கு மருத்துவ செலவு யார் செய்தது என்று தெரியாது. மனுவில் குழந்தை Pre.KG, LKG எந்த பள்ளியில் படித்தார் என்ற விவரம் சொல்லவில்லை. காரணம் எனக்கு தெரியாது.

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குழந்தை எந்த பள்ளியில் எந்த வகுப்பில் படிக்கிறார் என்று சொல்லவில்லை, காரணம் அந்த விவரம் எனக்கு தெரியாது. மனுவில் நான் என்றைக்காவது குழந்தையை சென்று பார்த்ததாக சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லவில்லை, காரணம் எதிர்மனுதாரர் அனுமதிக்கவில்லை. குழந்தையை பார்க்க அனுமதிக்க கோரி நான் நீதிமன்றத்தில் இடைநிலை மனு எதுவும் மனு தாக்கல் செய்யவில்லை. அதற்கு பதிலாகதான் இந்த GWOP போட்டு இருக்கிறேன். மனுவில் குழந்தைக்கு பிறந்தநாள் வாழ்த்து சொன்னதாகவோ, படிப்பு செலவு, மருத்துவ செலவு போன்றவை செய்ததாகவோ சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. ம.சா.ஆ.3 மற்றும் 6 ல் உள்ள சொத்து விவரங்கள் ஒரே மாதிரி உள்ளன என்றால் சரிதான். கதவு எண் 26/69, சர்வே எண் 45/14 சொத்தில்தான் சத்யமூர்த்தி, ராஜேந்திரன், ஆறுமுகம் ஆகியோர் வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் தற்போதும் அங்குதான் வாடகைக்கு குடியிருந்து வருகிறார்கள். என் தகப்பனார் எனக்கு 2018 ல் எழுதி வைத்த 1000 சதுரடி சொத்தில்தான் நான் தற்போது குடியிருந்து வருகிறேன். ம.சா.ஆ.2 ல் அயிட்டம் 2 சொத்தின் விஸ்தீரணம் 1114 என்று உள்ளது. 3 வாடகைத்தாரர்களிடம் இருந்து மாத வாடகை மொத்தம் ரூ.16,500/- நான்தான் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. அது மைனர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. 2019 ல் இருந்து ஆகஸ்ட் 2025 வரை மைனர் சொத்தில் இருந்து இந்த 3

வாடகைதாரர்களிடம் இருந்து வாடகை பணம் ரூ.12,70,500/- வசூலித்து இருக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu